
www.padippakam.com



'சாயங்காலப் பூஜைக்கும் இரண்டாங்காலப் பூஜைக்கும் இடையே வசந்த மண்டபத்தின் எதிரே பொதுப்பெண்களின் நடன சங்கீத நிகழ்ச்சிகள் நடந்தன. திருவிழாக் காலங்களில் தேவதாசிகள் நடனமாடுவது சாதாரணமான நிகழ்ச்சியாக இருந்துள்ளது. 'அழகிய கோயிற் பெண்கள் , ஏராளமான நகைகளால் தங்களை

விருப்பினராய் அத்தோடு கோயிலாதீனம் ஊரவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சபையால் நடத்தப்படவேண்டுமென்றும் நோக்கமுடையவராய் அவ்வருடம் தை மாதத்தில் அக்கோயில் மகாசபை ஒன்று கூட்டிப் பிரசங்கஞ் செய்து 6000 வரையில் பணமும் கையொப்பமுஞ் சேர்த்தார். ரூபா 3000 வரையிற் செலவு செய்து கருங்கற்களும் எடுப்பிக்கப்பட்டன.

விடற்றற்பனை வயற்கரைக் கந்தசுவாமி கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. மேலும் தேர்த்திருவிழாவுக்கு முதல் நாள் செய்து வருகிற ஆட்டுக்கொலையை இனிமேல் அவ்வாறு செய்வதில்லையென்று நாவலருக்கு முன்செய்த, கொடுத்த பிரதிக்கினைக்கு மாறாகப் பின்னும் அக்கொலை நடந்தபடியால், நாவலர் அவர்கள் கோபித்து 1876 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் ஒரு மகாசபையைக் கூட்டி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலதிகாரியை விலக்குவதற்கு ஒரு வழக்குத் தொடரவும் பின் அக்கோயிலை ஒழுங்காய்



**-செங்கை ஆழியான்-**

# ஈழத்தவர் வரலாறு 33

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

அலங்கரித்துக் கொண்டு சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தேரின் முன் நடனமாடினார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் அரை நிர்வாணமாக புழுதியிற் பிரதிஷ்டை செய்தார்கள்' என மிறன் வின்ஸ்கோ தனது குறிப்பில் எழுதியுள்ளார்.

### நல்லூரும் நாவலரும்

நல்லைக் கந்தவேளுக்கும் நல்லை ஆறுமுகநாவலருக்கும் இடையில் நெருங்கிய பிணைப்புள்ளது. நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை சிவாகமங்களுக்கும் குமாரதந்திரத்திற்கும் இணங்க மாற்றியமைக்கவேண்டும் என அவர் விரும்பினார். 'இந் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குத் தூபி இல்லையே? தூபியில்லாதது கோயிலாகாதே. இக்கோயில் ஒரு சிறிதேனும் விதிப்படி கட்டப்பட்டிருக்கவில்லை என அவர் கூறினார்.

இது மடாலயம் ஆதலாலும் சமாதிக்கோயில் ஆதலாலும் விதிமுறைகளுக்கும் இணங்க அமைய வேண்டும் என்ற நியதி இல்லை என்பர். 'கி.பி. 1873 இல் கந்தையா மாப்பணார் அதிகாரியாயிருந்த காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் அக்கோயிற்றிருப்பணியைக் கருங்கல்லால் கட்டும்

இந்தியாவிலிருந்து முருகன், தெய்வயானை, வள்ளிநாயகி விக்கிரகங்கள் தருவிக்கப்பட்டன.



இடையில் நிகழ்ந்த மாற்றங்களால் அவ்விக்கிரகங்கள் நல்லையில் இடம் பெறாமல், தென்மராட்சி

நடத்துவதற்குமாக ஒரு சபை அக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டது.

நியமிக்கப்பட்ட சபையால் கோயிலதிகாரி மேல் வழக்குத் தொடர்ந்தனர்.

அது விளக்கத்திற்கு வருமுன் நாவலரவர்கள் தேகவியோகமாயினர். 1929 ஆம் ஆண்டு ஜூன் மீ 10 ம் திகதி இக்கோயில் பொதுவென்றும் கோயிலதிகாரி கோட்டுக் கணக்குக் காட்டவேண்டுமென்றுந் தீர்ந்த டிஸ்திரிக் கோட்டுத் தீர்மானம் நாவலர் அவர்கள் தொடங்கிய வழக்கின் பெறுபேறேயாகும். 'இக்கோயிலுக்கு பெயர் யாது? கந்தசுவாமி கோயில் இங்கிருக்கிற மூர்த்தி கந்தசுவாமியா? இல்லை வேலாயுதம் , கந்தசுவாமிக்கு வடிவம் வேலாயுதமா? அது அவர் கைப்படைக்கலம். அவரவேல் செய்யும் அடிமை' என நாவலர் கூறினார். தீட்சை பெறாத பிராமணர் பூசை செய்ததும் தேவதாசிகள் நடனமாடுவதும் தேர்த்திருவிழாவின் போது தேர்க்காவில் ஆடு வெட்டிப் பலிகொடுப்பதும் ஆகம விதிகளுக்கு முரண்ணானவை என அவர் கருதினார். அதனால் அக்காலத்தில் கோயிலதிகாரியாக இருந்த கந்தையா மாப்பாணருடன் பெரும் சச்சரவுபட்டுக் பிரிந்தார். ஒரு கட்டத்தில் இருபத்தைந்து வருடகாலம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போகதிருந்தார். ஒரு கட்டத்தில் இருபத்தைந்து வருடகாலம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போகாதிருந்துள்ளார். நாவலருக்கும் மாப்பாணர்களுக்கும் விரோதம் இருந்துள்ளதை நாவலரின்



'நல்லூர்க் கந்தசுவாமி கோயில்' என்ற கட்டுரையிலிருந்து அறிய முடிகின்றது. 'எப்படியாயினும் ஆகட்டும் இங்கே அருள் விளக்கம் இருக்கிறது' என்பதை நாவலரும் ஏற்றுக்கொண்டார். கி.பி. 1248 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட நல்லூர் கந்தசுவாமி கோவில் சைவ மக்களின் வழிபாட்டிடமாகவும் தமிழ் மக்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த பெருங்கோயிலாகவும் கடந்த பல நூறு ஆண்டுகளாக விளங்கி வருகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆயிரமாண்டுகள் நீண்ட பாதையில் கந்தவேள் ஆலயம் வரலாறு படைத்துள்ளது.

முற்றும்

படிப்பகம்